# ஆஸ்பத்திரி....

(33ம் பக்கத் தொடர்ச்சி)

பாம்பைக் கண்டாப் படையும் நடுங்கும் எண்டிற மாதிரி எனக்கு ஊசியைக் கண்டால் நடுங்கும். ஒருக்கால் மாமா வீட்டு நாய்க்கு விசர் பிடிச்சு அது கடிச்சாக்கள், கடிக்காதாக்கள், முகர்ந்து பாத்திட்டு விட்டிட்டுப் போனாக்கள் எண்டு எல்லாருக்கும் மொத்தமா தொப்புளைச் சுத்தி தொடர்ச்சியா பதினாலு நாள் ஊசி.

வயிறு கல்லு மாதிரி இறுகித்தான் கிடந்தது. அப்ப சரியா நோகுதெண்டு நான் கொஞ்சம் நெளிஞ்சு வளைஞ்சு தான் நடப்பன். மாமா நக்கலடிப்பார் சிவாஜிகணேசன் தோத்தான்ரா உன்னட்டை என்ன ஒரு நடிப்பெண்டு. (இப்ப நான் சென்னைக்கு வந்தது மாமாவின்ர ஊக்குவிப்பால தான் எண்டு தப்புக்கணக்குப் போடவேண்டாம்) அப்படி ஊசிக்கும் எனக்கும் சோதனையான அறிமுகங்கள் இருக்கிறதால பெரும்பாலும் டாக்குத்தர் ஊசி எழுதியிருக்கிறார் எண்டு தெரிஞ்சாலே துண்டைக்காணம் துணியைக் காணம் எண்டு பறந்திருவன்.

பொதுவாவே இந்த ஊசிபோடுற அறையளைப் பார்க்கும்போதே ஏதோ சித்திரவதைக்கூடத்துக்குள் போற மாதிரியே ஒரு உணர்வு. பொட்டா ரத்தம் கசிஞ்சிருக்கிற பஞ்சுத் துண்டுகள் நிறைஞ்ச ஒரு குப்பைக்கூடை, ஒரு பக்கம் அப்படியே கொதிச்சுக்கொண்டிருக்கிற ஊசி அவியவைக்கிற பாத்திரங்கள் எண்டு கொஞ்சமா உங்களிட்ட கற்பனைத்திறன் இருந்தாலே போதும் அது உங்களிற்கு ஒரு நரகலோகமாகவே தெரியும்.

பத்தாக்குறைக்கு ஊசி போடுறதுக்கு குண்டா ஒரு நேசிருந்தா எண்டு வையுங்கோ எம கிங்கரர்களையும் சேர்த்தே கற்பனை பண்ணலாம்.

குண்டா இருக்கிற நேஸ்மார் ஊசியை இறுக்கி நோகத்தக்கதாகத்தான் போடுவினம் எண்ட கண்டுபிடிப்பை முதலில் செய்தது சின்னக்காதான்.

கிளிநொச்சியில் ஒரு குண்டு நேஸ் இருந்தவா. ஓராள் என்ன ஒருசிலரைத்த தவிர எல்லாரும் குண்டாத்தான் இருந்திச்சினம் எண்டது வேறு கதை. அதில இவா ஓராள் அவாவைச் சின்னக்கா நெடுகிலும் பேசுவா அந்தக் குண்டுச்சனியன் போட்டா இன்னமும் பெரிசா நோகும் எண்டு. அது எவ்வளவோ பரவாயில்லை. எப்பயாச்சும் உங்களுக்கு ஏழரைச் சனியன் உச்சத்தில் இருக்கும் பட்சத்தில் ஆம்பிளை நேர்ஸ் மாரிட்ட மாட்டினியள் எண்டு வையுங்க சொர்க்கத்தையே காட்டுவாங்கள்.

## ஆஸ்பத்திரியின் கறைபடிந்த சுவர்களிற்குள்ளும் சவலோன் நாற்றமடிக்கும் சூழலுக்குள்ளும் ஒரு இதயம் துடித்துக் கொண்டிருப்பதையும் உணர முடிந்தது.

மண்டை உடைஞ்சது, இன்னும் சில பல காயங்களிற்கெல்லாம் வெளியில சுப்பையரிட்டயே மருந்து கட்டீட்டு ஏற்பூசி போட மட்டும் அரசாங்க ஆஸ்பத்திரிக்கு போறது. வெளியில் மருந்து கட்டினது அரசாங்க ஆஸ்பத்திரி டொக்ரரிற்குத் தெரிஞ்சுதோ அவ்வளவுதான். நீ மருந்து கட்டின இடத்தில போய் ஊசியைப் போடு எண்டிருவாங்கள்.

அதுக்கெல்லாம் ஆஸ்பத்திரியில் ஆள் இருக்கவேணும் எங்களுக்கும் அப்படித் தெரிஞ்ச ஓராள் இருந்தவா தனுஸ் அன்ரியெண்டு, அவவின்ர பெயர் தனுஸ் இல்லை. என்ர தோழன் ஒருத்தனுக்குப் பெயர் தான் தனுஸ் அவன்ர அன்ரி இவா எண்டிறதால இவாக்கு அந்தப்பெயர். இவாட்ட சொன்னா டொக்ரரிட்ட போகாமலே ஊசியைப்போட்டு விடுவா. இவா போடேக்க மெதுவாப்போடுற மாதிரித்தான இருக்கும் ஆனாலும் நோகும்.

நீங்கள் மருந்தையும் அரசாங்க ஆஸ்பத்திரியிலயே கட்டலாம் தானே எண்டு கேப்பியள் நியாயந்தான் ஆனால் இங்க காயத்தை காட்டினியள் எண்டு வையுங்கோ சுத்தமாக் கிறன் பேர்வழியெண்டு கத்திரிக்கோல் நுனியில் பஞ்சை வைச்சுப்போட்டு துடைக்கிற மாதிரித்தான் இருக்கும் ஆனால் வெறுங்கத்திரிக்கோலால பிறாண்டித்தான் எடுப்பினம் காயத்தில இருக்கிற அசடை.

இந்த விசயத்துக்குப் பயந்து கொண்டுதான் நான் அரசாங்க ஆஸ்பத்திரியில் மருந்து கட்டுவதைத் தவிர்த்து வந்தேன்.

ஆனா அதைவிடவும் ஒரு காரணம் இருந்தது. அரசாங்க ஆஸ்பத்திரியில் பஞ்சு மருந்து கட்டுற பண்டேஜ் போன்றவற்றிற்கு எப்பவும் தட்டுப்பாடு. அதாலதான் அவையள் அதைக் கொஞ்சமாச் செலவழிக்கினம். அநேக நேரங்களில் வீட்டில இருந்து துணியைக் கொண்டு போனால்தான் மருந்து கட்டுவினம் எண்டுற அளவுக்கு அதுக்கெல்லாம் தட்டுப்பாடு இருந்தது. யுத்தம் அகோரமா நடக்கிற நாட்களில் ஆஸ்பத்திரி தொண்டர்கள் வீடு வீடா வந்து பழைய வெள்ளைத் துணிகள் சேகரிச்சுக்கொண்டு போறதும் நடக்கிறது.

சின்னவயதில் கொஞ்சம் அச்சமூட்டக் கூடிய ஒன்றாய் இருந்த ஆஸ்பத்திரி. பிறகு வயதாக ஆக வேறு மாதிரித் தோற்றம் பெற்றது. (வயசு ஆக ஆக எண்டு இழுக்கிறதைப் பாத்து அழகான நேஸ்மாரைச் சைற்றடிக்கிற வயசைச் சொல்றன் எண்டு நினைக்கிறியளோ)

அதையும் சேர்த்து அந்த கறைபடிந்த சுவர்களிற்குள்ளும் ஒரே மாதிரி சவலோன் நாற்றமடிக்கும் அந்த சூழலுக்குள்ளும் ஒரு இதயம் துடித்துக் கொண்டிருப்பதையும் என்னால் உணர முடிந்தது. சொல்லப் போனால் மனிதர்களின் இதயத்துடிப்புக்களை அது காத்துக் கொண்டிருந்தது.

எத்தனை அழகான பிறப்புக்கள் தினந்தோறும் வைத்தியசாலையின் மடியில் நிகழ்கின்றன. எத்தனை பேரைப் பிணிகளில் இருந்து அது விடுவிக்கிறது. மறுபடியும் வாழ்க்கையின் வட்டத்தில் சேர்க்கிறது. ஒரு மனிதனை வாழ வைக்க அது கடைசிவரைக்கும் முயற்சித்துக் கொண்டேயிருக்கிறது. சில தவிர்க்க முடியா மரணங்களும். ஆனால் எல்லாவற்றையும் மீறி அந்த அசுத்தமான அழகுக்குள் கனிவும் அக்கறையும் கொண்ட மனிதர்கள் இருக்கிறார்கள்.

வைத்திய சாலைகள் அழுக்கான சுவர்களுடனும் கொஞ்சம் அழகான மனங்கள் கொண்ட மனிதர்களுடனும். உண்மையில் நிரம்பி வழிகிற வைத்திய சாலை இருக்கைகளில் இருக்கைகளையும் மீறி தரையிலும் காத்திருக்கிற நோயாளிகளையும். வைத்திய சாலைக் கட்டில்களையும் மீறி வார்டுகளின் வராந்தாக்களில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகளையெல்லாம் பராமரித்த வைத்தியர்கள் விரல்களிற்குள் அடங்கிவிடுற எண்ணிக்கையில் தான் இருந்தார்கள் என்றால் நம்பமுடிகிறதா?

இன்னமும் என் ஊரில் இதே மாதிரித்தான இருக்கின்றன வைத்தியசாலைகள். அதே யுத்தம் அதே மருந்துத் தட்டுப்பாடு அதே மனிதர்களில் தப்பிப் பிழைத்த மீதிப்பேருக்கும் திரும்பவும் அதே துன்பங்கள்.

ஆனால் இங்கே சென்னையில் அப்படி அல்ல என் வீட்டை விடச் சுத்தமாயிருக்கிறதோ என்கிற அளவுக்கு சுத்தமாய்ச் சுவர்கள் இருக்கின்றன. தரை இடியப்பமும் சொதியும் ஊத்திச் சாப்பிடலாம் என்கிற அளவுக்குச் சுத்தமாயிருக்கிறது. எல்லா நோய்களையும் தீர்த்து விடுகிற அளவுக்கு மருத்துவ அறிவிருக்கிறது. மருந்துகள் வருவதற்குத் தடை விதிப்பார் யாரும் கிடையாது.

தங்களுடைய ஆஸ்பத்திரிக்கே வாருங்கள் எண்டு விளம்பரம் வேறு. அதுவும் அழகான பெண்களை வைத்து. ஆனாலும் என்ன தெர்மா மீட்டரை நோயாளியின் வாயில் வைத்து விட்டுப் கவனமாகப் பிடியுங்கள் என்று சொன்னாலும் பரவாயில்லை பதிலாக உடைந்தால் 100 ரூபாய் என்று வியாபாரம் பேசுகிறார்கள்!!!


MARKANDAN & CO
SOLICITORS & ESTATE AGENTS

*We also Specialise in....*

- அகதி நிலை - ஆரம்ப முதல் இறுதி விண்ணப்பம்
- உயர்தரத் திறமை குடிவரவுத் திட்டம்
- ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரப் பிரதேச குடும்ப அங்கத்தவர் பதிவு.
- தொழில் முறை மற்றும் மாணவர் விசா விண்ணப்பம்
- அகதி நிலை மேன்முறையீடு
- ஐக்கிய இராச்சிய பிரஜாவுரிமை / தேசியம்
- வேலை செய்யும் விடுமுறை விண்ணப்பம்
- ஐக்கிய இராச்சிய/உள்வரவு அனுமதி/விசா விண்ணப்பம்
- வதிவிட உரிமை/நீண்டகாலம் (5,7,10,14) வருடங்கள் தங்கியுள்ளோர் விண்ணப்பம்
- தங்கியுள்ளோர் / உறவினர் விடுமுறை / வதிவிட விண்ணப்பம்
- விசா நீடிப்பு

**No Win – No Fee**

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்.

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்
விவாக விண்ணப்பங்கள் | அகதி விண்ணப்பங்கள்
14, 10 அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணப்பங்கள்
பிரித்தானிய பிரஜாவுரிமை | வீதிப் போக்குவரத்து | சம்பந்தமான வழக்குகள்

**கடன் சுமையில் இருக்கிறீர்களா?**

உங்கள் வீட்டை வங்கி திரும்பப் பாரமெடுக்கும் துர்பாக்கிய நிலையில் உள்ளீர்களா? அதை வெற்றிகரமாகத் தடுக்கும் நிலையில் நாம் உள்ளோம்.

நீங்கள் கடன் சுமையால் அல்லல் படுகிறீர்களா? எங்களால் உங்களை கடன் சுமையிலிருந்து விடுவிக்கவும் வங்குரோத்திலிருந்து பாதுகாக்கவும் முடியும்.

கடன் காப்புறுதிப் பாதுபாப்புச் செய்திருந்தீர்கள் என்றால் வங்கியிலிருந்து உங்களால் பணம் கோர முடியும். **திரு தாசு**டன் தொடர்பு கொள்ளுங்கள்..

வரிச்சுமைகளை குறைப்பதற்கும் ஆலோசனைகள் வழங்கப்படும்

அனுபவமிக்க எங்கள் சட்ட நடவடிக்கைப் பிரிவு, சமூக, தொழில், விவாகப் பிரிவு போன்ற எல்லா வழக்குகளையுமே மகிழ்வுடன் நடாத்தி வெற்றியும் கண்டுள்ளார்கள்.

Is you house in danger of re-possession from your bank.
We have been successful in stopping the re-possession.



845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: **0208 514 8188** Fax: **0208 514 8303**
Web: www.markandan-solicitors.com
Email: mm@markandan-solicitors.com

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்....

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.